

2021

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்திர செயல்திறன் அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

ශ්‍රී ලංකාවේ ජාතික බුද්ධිමය දේපළ කාර්යාලය

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

National Intellectual Property Office of Sri Lanka

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2021

தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தாபனத்தின் பெயர் : தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

உள்ளடக்கம்

பக்கம்

அத்தியாயம் 01 – தாபன ரீதியான கண்ணோட்டம்	1-8
அத்தியாயம் 02 – செயலாற்றுகை மற்றும் தொலை நோக்கு	9-28
அத்தியாயம் 03 – வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை	29-61
அத்தியாயம் 04 – செயலாற்றுகைக் குறிகாட்டி	63-65
அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை	67-70
அத்தியாயம் 06 – மனித வளக் கண்ணோட்டம்	71-76
அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை	77-98

அத்தியாயம் 01 – தாபன ரீதியான கண்ணோட்டம்

1.1 அறிமுகம்

1.2 தாபனத்தின் தொலை நோக்கு, செயலாற்றுகை, நோக்கங்கள்

1.3 பிரதான பணிகள்

1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

1.6 திணைக்களத்தின் கீழ் நிலவும் நிதியங்கள்

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள்

1.1 அறிமுகம்

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு உள்ள இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திடம் இலங்கையின் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பினை நிருவகித்தல் தொடர்பான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

எந்தவொரு நாட்டிலும் மொத்தப் பொருளாதார அபிவிருத்தியின் போது, விஷேடமாக அறிவு பிரதான வகையில் முனைப்பாகவும் மற்றும் நிச்சயமான வகையிலும் முக்கியத்துவம் பெறும் தற்கால சூழ்நிலையில் புலமைச் சொத்துக்கள் அத்தியவசியமான மற்றும் விஷேடமான கடமைப் பொறுப்பு ஒன்றினை மேற்கொள்கின்றது. மானிட முயற்சிகள் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு துறையிலும் முதலீடு, புத்தாக்கம் மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடு மற்றும் தொழிநுட்பப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பாய்ச்சலின் தேவைப்பாடு என்பனவற்றை வரலாற்றின் எக்காலத்திலும் பார்க்க தற்காலத்தில் இலங்கையிலும் உணர ஆரம்பித்துள்ளனர். மீளாய்வு செய்யப்படும் 2021 ஆம் ஆண்டில் இலங்கை புலமைச் சொத்துக்களின் நிருவாகத்திற்காக தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான சுருக்கமான விபரம் ஒன்று மேற்படி அறிக்கையின் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

அதற்கே உரித்தான விஷேடமான பண்புகளைக் கொண்ட புலமைச் சொத்துக்களை ஒரு வகைச் சொத்தாக அடையாளம் காண முடியும். மனிதனின் அறிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான பணிக்காக எழும் சட்ட ரீதியாக அமுல்படுத்தக் கூடிய உரிமைகளின் தொகுதி புலமைச் சொத்துக்களாகக் கொள்ளப்படும். இலக்கியம், கலை அல்லது விஞ்ஞான ரீதியான பணிகள், சமகாலக் கலைஞர்களின் நாடகக் காட்சி நிகழ்ச்சிகள்,ஒலிப்பதிவு வட்டுக்கள், ஒலி, ஒளி பரப்புதல்கள், புத்தாக்கங்கள்,கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரச் சின்னங்கள், சேவைச் சின்னங்கள், வர்த்தகப் பெயர்கள் மற்றும் பதவிகள், அநீதியான போட்டிக்கு எதிரான பாதுகாப்பு, புவியியல் சுட்டி, புதிய தாவர இனங்கள், வெளிப்படுத்தப்படாத தகவல்கள் மற்றும் இணைந்த சுற்றுக்களின் அமைப்புத்திட்ட வடிவமைப்புக்கள் போன்ற துறைகளுக்கு உரிய உரிமைகள் இதில் உள்ளடங்கும். நபர்களினால் உரிமைகள் வகிக்கப்படும் ஏனைய சொத்துக்களை சார்ந்த வகையில் காணப்படும் சில பண்புகள் புலமைச் சொத்துக்களுக்கும் பொதுவானதாகும். உதாரணமாக, புலமைச் சொத்து என்பது ஒரு வகை சொத்தாகும் என்பதுடன் அதற்கு நிதிப் பெறுமதி ஒன்றும் காணப்படும். ஏனைய எந்தவொரு வகையான சொத்தினைப் போலவே புலமைச் சொத்திற்கும் உரித்தாக்குதல், மற்றைய தரப்பினருக்கு உரித்தினை ஒப்படைத்தல், விற்பனை செய்தல் அல்லது அனுமதிப்பத்திரங்களைக் கைச்சாத்திடல் ஆகியவற்றினை மேற்கொள்ள முடியும். புலமைச் சொத்தினை அடையாளம் காணல் அல்லது அதன் பௌதீக நிலையளவின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் என்பவற்றினை மேற்கொள்ள முடியாமையினால் புலமைச் சொத்து தொட்டு உணர முடியாத ஒரு சொத்தாகும். அவ்வாறாயினும், புலமைச் சொத்தினைப் பாதுகாப்பதற்காக அதனைத் தெளிவான விதத்திலோ அல்லது முறையிலோ திட்டவட்டமாகக் கூறுதல் வேண்டும்.

கைத்தொழில் சொத்துக்கள் மற்றும் வெளியீட்டு உரிமைகள் என்ற வகையில் புலமைச் சொத்துக்கள் பிரதான வகையில் இரு வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன,

1. புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் மற்றும் புவியியல் குறிகாட்டிகள் என்பன உள்ளடங்கிய **கைத்தொழில் சொத்துக்கள்** மற்றும்
2. கல்வியியல் மற்றும் கலைசார் படைப்புக்களைத் தழுவும் வெளியீட்டு உரிமை, தற்காலக் கலைஞர்களின், ஒலிப் பதிவுகள் அல்லது ஒலிப்பதிவு வட்டுக்கள் தயாரிப்பாளர்களின் மற்றும் ஒளிபரப்பு அமைப்புக்களின் உரிமைகள் தொடர்பான உரித்துக்கள் அல்லது சார்ந்த உரிமைகள் என அழைக்கப்படும்.

1.2 தாபனத்தின் தொலை நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

தொலை நோக்கு

சந்தையினை மையமாகக்கொண்ட புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்றினை நாட்டிற்கு உரித்தாக்கிக் கொடுக்கும் அபிப்பிராயத்துடன் உயர் தரத்தினை நோக்காகக் கொண்ட விளைதிறன் மிக்க சேவைகளை வழங்கும் முதற்தர அரச நிறுவனம் என்ற நிலையினை அடைதல்.

செயற்பணி

புலமைச் சொத்துக்களின் ஆக்கம், பாதுகாப்பு மற்றும் வர்த்தகமயமாக்கம் என்பவற்றின் ஊடாக பொருளாதார நிலைபேற்றுத் தன்மையினை ஊக்குவிக்கும் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்று தாபிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.


நோக்கங்கள்

i. தேசிய புத்தாக்கத்தினை ஊக்குவித்தல்.
ii. நியாயமான வர்த்தகத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
iii. முதலீட்டு ஊக்குவிப்பு
iv. நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அறிவினை முதன்மையாகக் கொண்ட உலகளாவிய நடவடிக்கைகளுடன் தேசிய பொருளாதாரத்தினை ஒன்றிணைத்தல்.

1.3. பிரதான பணிகள்

- வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றினைப் பதிவு செய்தல் மற்றும் ஒன்றிணைந்த முகாமைத்துவ சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல் உட்பட புலமைச் சொத்துக்களை நிருவகித்தல்.
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பிரபல்யம் செய்தல்.
- புலமைச் சொத்து விடயம் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்.
- பொருளாதார விருத்திச் செயற்பாட்டிற்காக புலமைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதனை விருத்தி செய்தல்.
- புலமைச் சொத்து சார் இலங்கையின் சர்வதேச பொறுப்பினை நிறைவேற்றல் மற்றும் அது தொடர்பான வலய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.
- புலமைச் சொத்து தொடர்பான கொள்கைகளை முன்மொழிதல்.
- வெளியீட்டு உரிமை மற்றும் தொடர்புடைய உரிமைகள் தொடர்பான துறையில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், புலமைச் சொத்துக்கள் தொடர்பான உரிமைகளை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் .
- புலமைச் சொத்து முகவர்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல்.

1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்



1.5.1 வியாபாரச் சின்னங்கள் பிரிவு

புலமைச் சொத்துக்கள் விடயத்தின் கீழ் கைத்தொழில் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு உள்ள வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள் என்பவற்றினைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வியாபாரச் சின்னங்கள் பிரிவினால் மிகவும் முக்கியமான கடமைப் பொறுப்பு ஒன்று நிறைவேற்றப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வியாபாரச் சின்ன விண்ணப்பப்படிவம் ஒன்று அதனைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரையான மிகவும் சிக்கலான நடைமுறை ஒன்றிற்கு உட்படும்.

முதலில் விண்ணப்பப்படிவங்களை, அதன் முறையான தன்மை தொடர்பாக பரீட்சித்துப் பார்ப்பதுடன் முறையான தன்மை தொடர்பான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுமாயின் தேடல் பரீட்சிப்புக்கள் புலமைச் சொத்து அலுவலகத்தின் கணினிக் கட்டமைப்பின் (IPAS)[1] ஊடாக மேற்கொள்ளப்படும். அவ்வாறு பரீட்சித்துப் பார்த்ததன் பின்னர் சின்னங்களை, அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக பொறுப்பேற்றுக் கொள்ளப்படுவதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்காக மேற்படி விண்ணப்பதாரிகள், அவசியமெனின் உரிய விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கோ அல்லது நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக எழுத்து மூலம் விடயங்களை முன்வைக்கவோ முடியும். வெளியீட்டுக் கட்டணங்கள் (பிரசுரிப்பதற்கான கட்டணங்கள்) செலுத்தப்பட்டதன் பின்னர், ஏற்றுக்கொள்ளப்பட்ட சின்னங்கள் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதுடன் அதன் பின்னர் மூன்று

[1] IPAS – கைத்தொழில் சொத்துக்களின் நிருவாகக் கட்டமைப்பு

மாதங்கள் கழிந்ததன் பிறகு உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறு வெளியிடப்பட்ட வியாபாரச் சின்னம் ஒன்றிற்கு எதிராக மூன்றாம் தரப்பினர் ஒருவரினால் எதிர்ப்புக்கள் ஏதும் முன்வைக்கப்படும் சந்தர்ப்பம் ஒன்றில், எதிர்ப்புக்களுக்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட முடியும் என்பதுடன் மேற்படி எதிர்ப்புக்களுக்கான விசாரணை பூர்த்தியடைந்ததன் பின்னர் தீர்மானம் வெளியிடப்படும். அவ்வாறான ஒரு தீர்மானத்தினால் பாதிப்பிற்கு உட்படும் தரப்பினர் இருப்பின், அவர்களுக்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு ஒன்றினைச் சமர்ப்பிக்கும் ஆற்றலும் உள்ளது.

பணிப்பாளர் (சட்டம்) அவர்கள் மேற்படி பிரிவிற்குத் தலைமை வகிப்பதுடன், மூன்று உதவிப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், ஏழு புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள், பதினான்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஒரு முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையிலுள்ள நான்கு உத்தியோகத்தர்கள் ஆகியோரினை உள்ளடக்கிய பதவியணி ஒன்றினால் மேற்படி பிரிவின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1.5.2 ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு

ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் பிரதான பணிகள், ஆக்கவுரிமை விண்ணப்பங்களைப் பரீட்சித்து ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களைப் பரீட்சித்தல் மற்றும் பதிவு செய்தல் என்பன தொடர்பான நடவடிக்கைகள் ஆகும்.

பணிப்பாளர் (தகவல் மற்றும் பரீட்சிப்புக்கள்) தலைமை வகிக்கும் மேற்படி பிரிவானது, இரண்டு உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏழு பேர், முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவர், பட்டதாரிப் பயிலுநர்கள் ஐந்து பேர் மற்றும் அலுவலகப் பணியாளர் ஒருவர் ஆகியோரினை உள்ளடக்கி உள்ளது.

ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பேணுதல் ஆக்கவுரிமைகள் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய தகவல்களைப் பொதுமக்கள், பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தரப்பினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கு வழங்குதல் அவ்வாறே ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் தொடர்பான அறிவினை மேம்படுத்தல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றது.

1.5.3 தகவல் தொழிநுட்பப் பிரிவு

புலமைச் சொத்துக்கள் நடைமுறையின் பல்வேறு படிமுறைகளுக்கும் உரிய வகையில் புலமைச் சொத்து அலுவலகத்தின் கணினிக் கட்டமைப்பாகிய கைத்தொழில் சொத்துக்களின் நிருவாக்க் கட்டமைப்பினை (IPAS-Industrial Property Administrative System) இற்றைப்படுத்தல், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது கணினிக் கட்டமைப்பின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், இணையத் தளத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் என்பன தகவல் தொழிநுட்பப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன. பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் பரீட்சிப்புக்கள்) தலைமை வகிக்கும் மேற்படி பிரிவானது, உதவிப் பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் பரீட்சிப்புக்கள்) உத்தியோகத்தர்

ஒருவரையும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவரையும் உள்ளடக்கி உள்ளது.

1.5.4 தாபனப் பிரிவு

மேற்படி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்பினை வினைத்திறனுடனும் மற்றும் விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்காக அலுவலர் குழாத்தினை இணைத்துக்கொள்ளல், பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதன் ஊடாக தாபனத்தின் மொத்த உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்காக தாபனப் பிரிவினால் கூடிய பங்களிப்பு ஒன்று வழங்கப்படுகின்றது. நிருவாக உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்படும் மேற்படி பிரிவு மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர் ஒருவரையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரையும், நான்கு முகாமைத்துவ உதவியாளர்களையும், சாரதிகள் நான்கு பேரினையும் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் இரண்டு பேரினையும் உள்ளடக்கி உள்ளது.

1.5.5 கணக்குகள் பிரிவு

மேற்படி திணைக்களத்திற்குக் கிடைக்கும் சகல வருமானங்களையும் சிறாப்பர் கருமபீடத்தின் ஊடாகப் பொறுப்பேற்றல், வருமானங்களை உரிய வகையில் வகைப்படுத்தி சரியான முறையில் கணக்குகளில் சேர்த்தல், அலுவலக உத்தியோகத்தர்களின் சம்பள ஊதியங்களை வழங்குதல் மற்றும் அலுவலகச் செலவுகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள், தாபனத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடல், பெறுகை நடவடிக்கைகள் மற்றும் புலமைச் சொத்துக்கள் நிதியத்தின் நிதிய முகாமைத்துவம் என்பன கணக்குகள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பிரதான பணிகளாகும். மேற்படி கிளையில் கணக்காளரின் கண்காணிப்பின் கீழ் 11 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டு உள்ளனர்.

2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் மூடி வைக்கப்பட்டு இருந்தமை மற்றும் வரையறுக்கப்பட்ட வகையில் சேவைகளை வழங்கிய காலப் பகுதியில் சகல வருமானங்களையும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை நிகழ் நிலை (Online) முறையில் மேற்கொள்வன் ஊடாக தாபனத்தின் மொத்தச் செயலாற்றுகையினை சிறந்த மட்டத்தில் பேணி வருவதற்காக மேற்படி பிரிவினாலும் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு வழங்கப்பட்டது.

1.5.6 திட்டமிடல் பிரிவு

நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக் கூற்றுக்களுக்கு ஒத்தியங்கும் வகையில், நோக்கங்களை செயற்படுத்துவதற்கான உபாயமார்க்கத் திட்டத்தினைத் தயாரித்தல், நிறுவனத்தின் சாத்திய வளம் மற்றும் அடையாளம் காணப்பட்ட உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனத்தின் விஷேட இலக்குகளை செயற்படுத்துவதற்கான வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரித்தல், அதற்கு ஒத்தியங்கும் வகையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்தல், மேற்பார்வை மற்றும் பின்னாய்வு என்பவற்றினை மேற்கொள்ளல், செயலாற்றுகையினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல், விஷேடமாக உலகப் புலமைச் சொத்து அலுவலகத்திடம் (WIPO) சமர்ப்பிக்கப்பட வேண்டிய புள்ளிவிபரவியல் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை தேவையான பகுப்பாய்வுகளுடன் முன்வைத்தல், சேவை பெறுநர் பட்டயத்தினை நிறுவனத்தில் தாபித்தல் என்பவற்றின் மூலம் நிறுவனத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பகத்தன்மை

என்பவற்றை விருத்தி செய்தல், அதனூடாக நிறுவனம் சார் விளைதிறனை விருத்தி செய்தல், நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையுடன் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், நிறுவனத்தின் இலக்குகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை அடையாளம் காணல், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பரிந்துரைகளை முன்வைத்தல், பெறுகைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குதல், என்பன திட்டமிடல் பிரிவின் கடமைப் பொறுப்பாகக் குறிப்பிட முடியும்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஒருவரையும் மற்றும் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய ஓர் அலகாகும்.

1.6 திணைக்களத்தின் கீழ் நிலவும் நிதியங்கள்

- ✓ புலமைச் சொத்து நிதியம்

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

- × இல்லை

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

2.1 வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

2.2 ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

2.3 கைத்தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

2.4 விஷேட வெற்றிகள்

2.5 சவால்கள்

2.6 எதிர்கால இலக்குகள்

2.1 வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

அட்டவணை - 1 : 2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

செயற்பாடுகள்		நிறைவேற்றப்பட்ட பணிகள்		
		மதிப்பீடு செய்யப்பட்ட (புள்ளிவிபரவியல் ரீதியாக)	உண்மையான (புள்ளிவிபரவியல் ரீதியாக)	%
1	வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	9,251	9,947	108%
2	புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்புக்கள்	9,063	4,989	55%
3	சின்னங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரித்தல் தொடர்பான கடிதங்களை வழங்குதல்	13,595	11,001	81%
4	வியாபாரச் சின்னங்கள் தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல்	9,561	4,758	50%
5	வியாபாரச் சின்னங்களின் பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல்	7,380	5,461	74%
6	பதிவினைப் புதுப்பித்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	4,465	3,848	86%
7	ஒப்படைப்புக்களை அறிக்கையிட்டு வைத்தல்	1,115	1,233	111%
8	பெயர்/முகவரி என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களை அறிக்கையிட்டு வைத்தல்.	1,859	2,292	123%

COVID 19 தொற்று நோய் நிலைமை காரணமாக கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் முழுமையாகவும் மற்றும் இன்னும் இரண்டு மாத காலம் பகுதியளவிலும் நாடு முடக்கப்பட்டு இருந்த காலப்பகுதியில், நிறுவனத்தினால் பின்பற்றப்பட்ட, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானோர் கடமைக்குச் சமூகமளித்தல் மற்றும் வீட்டிலிருந்து நிகழ்நிலை முறையின் ஊடாக கடமையினை நிறைவேற்றல் (WFH) ஆகிய வழிமுறைகளின் ஊடாக, மிகவும் கடினமான கடமை சார் சந்தர்ப்பம் ஒன்றிலும் கூட வியாபாரச் சின்னங்கள் பிரிவின் சில செயற்பாடுகளினால் 100% இலும் அதிகமான செயலாற்றுகை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு புலமைச் சொத்து அலுவலகத்திற்கு ஆற்றல் கிடைத்து உள்ளது.


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் வியாபாரச் சின்னங்கள் பிரிவின் செயலாற்றுகையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

2.1.1 கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீடு

அட்டவணை - 2 : கிடைக்கப்பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020	2021
கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை	11,282	11,483	10,385	9,593	9,947
தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	21,606	6,542	10,224	12,551	4,989

வரைபு - 1 : கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை -2 வரைபு- 1 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டினை எடுத்துக் காட்டுகின்றது. அதற்கு அமைய 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் படிப்படியான பின்னடைவு ஒன்று எடுத்துக் காட்டப்படுவதுடன் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 2018 முதல் படிப்படியான விருத்தி ஒன்று தென்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் பின்னடைவு ஏற்பட்டு உள்ளது என்பது தென்படுகின்றது. கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக வீட்டில் இருந்து கடமையினை மேற்கொள்ளும் போது சில வேலை நடைமுறைகளைப் பூர்த்தி செய்வதில் செயன்முறை ரீதியான சிரமங்கள் ஏற்படல் இந்த நிலைமை ஏற்படுவதில் தாக்கம் விளைவித்து உள்ளது என்பதனைக் கருத முடியும்.

2.1.2 கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீடு

அட்டவணை - 3 :கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020	2021
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	11,282	11,483	10,385	9,593	9,947
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	10,622	5,192	14,993	5,932	3,848

வரைபு - 2 :கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை -3 வரைபு- 2 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டினை எடுத்துக் காட்டுகின்றது. அதற்கு அமைய ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் அவதானிக்கக் கூடிய ஏற்ற இறக்கம் இந்த முறையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட விருத்தி ஒன்றினை இம்முறை அவதானிக்க முடியாமல் சென்றது. நாட்டல் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகக் கடமைகள் மற்றும் வேலை நடைமுறைகள் குறிப்பிட்ட வழமையான முறையிலேயே வீட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்டமையின்(WFH) காரணமாக பூர்த்தி செய்யப்பட முடியாமையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருத முடியும்.

2.1.3 பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 4 : பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

ஆண்டு	2017	2018	2019	2020	2021
உள்நாட்டுச் சின்னங்கள்	6,324	1,998	5,250	2,442	2,734
வெளிநாட்டுச் சின்னங்கள்	4,298	3,194	9,743	3,590	2,729

வரைபு - 3 : பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 4 வரைபு- 3 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டப்பட்டு உள்ளது.

கொவிட் தொற்றுநோய் நிலைமையின் ஆரம்பத்தில் உள்நாட்டு வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு வியாபாரச் சின்னங்களின் பதிவு அதிகரித்து இருந்தது எனினும் 2021 ஆம் ஆண்டு ஆகும் போது கிட்டத்தட்ட சம எண்ணிக்கை வரை வீழ்ச்சி அடைந்து உள்ளது. எவ்வாறெனினும் மொத்த பதிவு செய்தல் எண்ணிக்கையில் பின்னடைவு ஒன்றினை அவதானிக்க முடியும் என்பதுடன் நிலவிய தொற்று நோய் நிலைமை அதற்கு காரணமாக அமைய முடியும் என்பதனை ஊகிக்க முடியும்.

2.2 ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

அட்டவணை - 5 : 2020.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

செயற்பாடுகள்		பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)		
		மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான	%
1	ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	550	539	98%
2	விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு (உள்நாட்டு ரீதியில்/ சர்வதேச ரீதியில் / ஆக்கவுரிமைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (PCT) கீழ் கோப்பிடப்பட்ட விண்ணப்பங்கள்)	550	660	120%
3	புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்புக்கள் (விண்ணப்பம் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து உள்ளதா எனப் பரீட்சித்தல்)	960	1084	113%
4	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக ஜேர்னல்களைத் தயாரித்தல்	4	8	200%
5	ஆக்கவுரிமைகள் தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல்	200	222	111%
6	ஆக்கவுரிமைச் சான்றிதழ்களைத் தயாரித்தல்	200	194	97%
7	பதிவு புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	530	313	59%
8	பொது மக்களுக்கான தகவல்களை வழங்குதல்/ உள்நாட்டுத் தரவுத் தொகுதியினுள்ளே சென்று தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்	100	18	18%

COVID 19 தொற்று நோய் நிலைமை காரணமாக கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் முழுமையாகவும் மற்றும் இன்னும் இரண்டு மாத காலம் பகுதியளவிலும் நாடு முடக்கப்பட்டு இருந்த காலப்பகுதியில், நிறுவனத்தினால் பின்பற்றப்பட்ட, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானோர் கடமைக்குச் சமூகமளித்தல் மற்றும் வீட்டிலிருந்து நிகழ்நிலை முறையின் ஊடாக கடமையினை நிறைவேற்றல் (WFH) ஆகிய வழிமுறைகளின் ஊடாக, மிகவும் கடினமான கடமை சார் சந்தர்ப்பம் ஒன்றிலும் கூட ஆக்கவுரிமைகள் பிரிவின் சில செயற்பாடுகளினால் 100 % இலும் அதிகமான செயலாற்றுகை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு புலமைச் சொத்து அலுவலகத்திற்கு ஆற்றல் கிடைத்து உள்ளது.


பிரதான 3 செற்பாடுகளின் கீழ் ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

2.2.1 _கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 6 : கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020	2021
கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை	543	603	611	603	539
தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	1,120	1,059	1,117	922	1084

வரைபு - 4 : கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




அட்டவணை -6 வரைபு- 4 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன. கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது ஆகக் கூடுதலான எண்ணிக்கையில் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளமை அவதானிக்கப்படுகின்றது. அதற்கு அமைய ஆக்கவுரிமைகள் பிரிவில் ஏற்கனவே தாமதமடைந்து உள்ள வேலைகளின் அளவில் தெட்டத்தெளிவான குறைவு ஒன்றினை எதிர்வரும் காலத்தில் எதிர்பார்க்க முடியும்.

2.2.2 கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 7 :கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020	2021
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	543	603	611	604	539
ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	181	212	175	273	194

வரைபு - 5 : _கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 7 மற்றும் வரைபு - 5 என்பவற்றின் ஊடாக 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையில் சதவீதத்தில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு ஒன்று தென்படவில்லை. அவ்வாறெனினும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் அவ்வாறே ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஒன்றினை அவதானிக்க முடியும். கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் ஏற்பட்ட புதிய நிலைமைகள் காரணமாக 2019-2020 காலப்பகுதிக்குள் அதிகரித்த வெளிநாட்டு ஆக்கவுரிமை


விண்ணப்பங்களின் எண்ணிக்கை, 2021 ஆம் ஆண்டாகும் போது படிப்படியாகக் குறைவடைவதற்கு காரணமாக அமைந்து உள்ளது என்பதனை ஊகிக்க முடியும்.

2.2.3 ஆக்கவுரிமை வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 8 : பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

ஆண்டு	2017	2018	2019	2020	2021
உள்நாட்டு	54	64	39	47	66
வெளிநாட்டு	127	148	136	226	128

வரைபு - 6 : ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 8 மற்றும் வரைபு – 6 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வெவ்வேறாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது. 2019 ஆம் ஆண்டில் COVID 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட புதிய நிலைமைகளை உபயோகப்படுத்தி வெளிநாட்டு ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையில் தெட்டத் தெளிவான விருத்தி ஒன்றினை 2020 ஆம் ஆண்டு ஆகும் போது அவதானிக்க முடியுமாக உள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் படிப்படியான வீழ்ச்சி ஒன்று தென்படுகின்றது. கொவிட் பிரச்சினை காரணமாக உள்நாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 2019 ஆம் ஆண்டில் தீடீர் வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் அதில் படிப்படியான விருத்தி ஒன்று தென்படுகின்றது.

2.3 கைத்தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

அட்டவணை - 9 : 2021.12.31 2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

செயற்பாடுகள்		பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)		
		மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான	%
1	கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	182	139	76%
2	விண்ணப்பங்களுடன் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு (உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான விண்ணப்பங்கள்)	182	252	138%
3	விண்ணப்பங்களின் தேடல் பரீட்சிப்பு	182	164	90%
4	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான ஜேர்னல்களைத் தயாரித்தல்	4	5	125%
5	கைத்தொழில் வடிவமைப்புக்களுடன் தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்	120	79	66%
6	கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய சான்றிதழ்களைத் தயாரித்தல்	120	99	83%
7	பதிவு புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	230	121	53%
8	பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்/ உள்நாட்டுத் தரவுத் தொகுதி ஒன்றிற்குள் பிரவேசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.	50	18	36%

இதற்கு அமைய, COVID 19 தொற்று நோய் நிலைமை காரணமாக கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் முழுமையாகவும் மற்றும் இன்னும் இரண்டு மாத காலம் பகுதியளவிலும் நாடு முடக்கப்பட்டு இருந்த காலப்பகுதியில், நிறுவனத்தினால் பின்பற்றப்பட்ட, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானோர் கடமைக்குச் சமூகமளித்தல் மற்றும் வீட்டிலிருந்து நிகழ்நிலை முறையின் ஊடாக கடமையினை நிறைவேற்றல் (WFH) ஆகிய வழிமுறைகளின் ஊடாக, மிகவும் கடினமான கடமை சார் சந்தர்ப்பம் ஒன்றிலும் கூட கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவில் அதிகூடிய செயலாற்றுகை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு புலமைச் சொத்து அலுவலகத்திற்கு ஆற்றல் கிடைத்து உள்ளது.


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் கைத்தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை பகுப்பாய்வு செய்யப்பட்டு உள்ளது.

2.3.1 கிடைக்கப் பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 10 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020	2021
கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	336	288	546	281	139
தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	259	242	449	288	164

வரைபு - 7 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 10 மற்றும் வரைபு -7 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்குரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படும் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையில் நிலவும் குறைந்த இடைவெளியின் மூலம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின்


எண்ணிக்கையினை மிகைத்தல் என்பவற்றின் மூலம் இந்தப் பிரிவில் தாமதமடைந்த பணிகள் குறைவாக உள்ளமையினை எடுத்துக் காட்டுகின்றது. அவ்வாறே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டு உள்ள துரித வீழ்ச்சியின் மூலம் இந்தக் காலப்பகுதியில் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இறுக்கம் தொடர்பில் ஒரு சாடைக் குறிப்பினை வழங்குகின்றது என்பதனை ஊகிக்க முடியும்.

2.3.2. கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2017	2018	2019	2020	2021
கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	336	288	546	281	139
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	330	124	258	151	99

அட்டவணை - 11 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

வரைபு - 8 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை – 11 மற்றும் வரைபு - 8 என்பனவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.


கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் உலகம் பூராகவும் புத்தாக்கங்களில் ஏற்பட்ட விருத்தி 2019 ஆம் ஆண்டில் தென்படும் ஆகக் கூடிய எண்ணிக்கையிலான விண்ணப்பங்களின் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது. அவ்வாறெனினும் பின்னர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் தென்படும் பின்னடைவின் மூலம் 2021 ஆம் ஆண்டாகும் போது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்டு உள்ள வீழ்ச்சி எடுத்துக் காட்டப்படுவதனை ஊகிக்க முடியும்.

2.3.2 பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 12 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

ஆண்டு	2017	2018	2019	2020	2021
உள்நாட்டு	189	86	197	122	54
வெளிநாட்டு	141	38	61	29	45

வரைபு - 9 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 12 மற்றும் வரைபு - 9 என்பவற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டுகின்றது. 2017 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதிக்குள் மொத்த பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் உள்நாட்டு விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு விண்ணப்பங்களில் வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்படுகின்றது எனினும் 2021 ஆம் ஆண்டில் அதில் துரித விருத்தி ஒன்றினைக் காட்டுகின்றது.

2.4 விஷேட வெற்றிகள்

- வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் வசதிகளை வழங்கும் மெட்ரிட் சாசனப் பத்திரத்திற்குள் பிரவேசிப்பதற்காக உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பிற்கு விண்ணப்பிப்பதற்கும் மற்றும் புலமைச் சொத்துச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்று உள்ளது. அதற்கு அமைய சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ள திருத்தம் செய்யப்பட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய சட்ட வரைவிற்காக தற்போதாகும் போது தாபனத்தின் அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- பாடல் ஒன்று அல்லது இசை ரீதியான படைப்பு ஒன்றினை வானொலியில் ஒரு முறை ஒலிபரப்பும் போது ரூ. 20 தொகையாகிய ஆகக் குறைந்த தொகையினையும் மற்றும் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பும் போது ரூ. 100 தொகையாகிய ஆகக் குறைந்த தொகையினையும் மேற்படி பாடலுக்காக உரிமைத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும் எனக் குறித்துரைத்து உரிமைத் தொகைக்குரிய உரித்தினை இசைத்துறையில் உள்ள கலைஞர்களுக்கு உரித்தாக்கிக் கொடுத்தல் தொடர்பாக ஆகக் குறைந்த கட்டணங்களைக் குறித்துரைத்து அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டது 2020 ஆம் ஆண்டில் ஆகும். அதற்கு அமைய இந்த வருடத்தில் (2021 ஆம் ஆண்டில்) கௌரவ வர்த்தக அமைச்சர் அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய, ஊடகங்களின் ஊடாக ஒளிபரப்பப்படும் புதிய பாடகர், பாடகிகளைத் தெரிவு செய்யும் போட்டிகளின் போது (ரியலிட்டிப் போட்டி) பாடப்படும் பாடல்களின் வெளியீட்டு உரிமைகளுக்காக உரிமைத் தொகைகளை அறிவிட்டுக்கொள்ளல் உட்பட சார்ந்த விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்காக, அமைச்சு உத்தியோகத்தர் ஒருவரின் பங்களிப்பிலும் மற்றும் புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி உட்பட அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய குழு ஒன்று அமைச்சுச் செயலாளர் அவர்களினால் நியமிக்கப்பட்டு உள்ளது.

- புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதனை நோக்காகக் கொண்டு புலமைச் சொத்துச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்கள் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவைப் பத்திரத்தின் வரைவு வர்த்தக அமைச்சிடம் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டு உள்ளது.

- பொது மக்களுக்கு ஆக்கவுரிமைகள் தொடர்பான தகவல்களுக்குள் பிரவேசிப்பதற்கான வசதிகளை விருத்தி செய்வதற்காக 02 நவீன தொழிநுட்ப மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு மத்தியநிலையங்களை (TISC) இந்த ஆண்டிற்குள் தாபிப்பதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.

- மரகேஷ் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையினுள் ஏற்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக புலமைச் சொத்துச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்களுக்காக பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப்பெற்று உள்ளது.

- இலங்கையினுள் இணைந்த சுற்றுக்களுக்கான திட்டத்தின் வடிவமைப்பினைப் (Layout Designs of Integrated Circuits) பதிவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான அடிப்படை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் கோப்புக்களைப் பாதுகாத்தல், விண்ணப்பங்களைப் பரீட்சிக்கும் வினைத்திறனை அதிகரித்தல், தரவுகளுக்கான பிரவேசத்தினை துரிதப்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்ட கோப்புக்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்காக மேற்படி ஆண்டிற்குள் கருத்திட்ட முன்மொழிவு ஒன்றினைத் தயாரித்து ஆரம்ப கட்டப் பணிகளை ஆரம்பிக்கும் ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் புலமைச் சொத்துப் புத்தாக்கங்கள் மற்றும் வணிகமயமாக்கம் என்பவற்றினை துரிதப்படுத்துவதற்காக புலமைச் சொத்துக்கள் சுற்றாடல் கட்டமைப்பு ஒன்றினைக் (EIE) கட்டியெழுப்பும் கருத்திட்டத்தின் கீழ் கொள்ளளவு விருத்திக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று இந்த வருடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

- சட்டத்தில் திருத்தம் செய்தல் மற்றும் புதிய ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் போன்ற கொள்கை மட்டத்திலான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக நடாத்தப்படும் புலமைச் சொத்து ஆலோசகர் குழுக் கூட்டங்கள் 04 இனை கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் கீழும் வெற்றிகரமாக நடாத்துவதற்கான ஆற்றல் கிடைத்துள்ளது.

- கொவிட் 19 தொற்றுநோய் நிலவிய காலப்பகுதியில் விண்ணப்பதாரிகளுக்கும் மற்றும் சேவை பெறுநர்களுக்கும் சேவையினை வழங்குவதற்காக நிகழ்நிலைக் (Online) கோப்பிடும் வழிமுறை ஒன்றினை பொதுமக்களுக்கு அறிமுகம் செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்றதுடன், அதற்கு அமைய சேவையினைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்று உள்ளது.
- கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினை முகாமை செய்து நிகழ்நிலை முறையில் புலமைச் சொத்து விடயம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வளவாளர் பங்களிப்பினை வழங்குதல் என்பவற்றிற்கான ஆற்றல் கிடைத்து உள்ளது.

- கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் Zoom/ Team தொழிநுட்ப முறையின் கீழ் உலக புலமைச் சொத்து அலுவலகம் உள்ளடங்கிய பல்வேறு நிறுவனங்களினால் நடாத்தப்படும் செயலமர்வுகளுக்காக புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள் மற்றும் வெளி நிறுவனங்களைப் பங்குபற்றச் செய்து புலமைச் சொத்து தொடர்பான அறிவினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சர்வதேச நுகர்வோர் தினம் 2021 இனைக் கொண்டாடுவதற்காக இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் தமது நுகர்வோருக்காக நடமாடும் முகாம் ஒன்றினை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.





சர்வதேச நுகர்வோர் தினம் 2021 – நடமாடும் சேவை முகாம் ஒன்றினை நடாத்துதல்

2.5 சவால்கள்

- **தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கான நிலையான கட்டிடம் ஒன்று இல்லாமை மற்றும் போதிய இடவசதிகள் இல்லாமை.**

மேற்படி திணைக்களம் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 27 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் பூராகவும் பேணப்பட்டு வருவது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு உரிய சமாகம் மெதுர கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 3 ஆவது மாடியிலும் மற்றும் 2 ஆவது மாடியின் ஒரு பகுதி உரித்தாகும் வரையருக்குப்பட்ட அலுவலக இடப்பிரதேசத்தில் ஆகும். கட்டிடத்தின் மேற்படி இடப் பிரதேசத்தினையும் மீண்டும் பெற்றுத் தருமாறு 07 வருட காலங்களுக்கும் மேலாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளுக்கு அமைய, தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினை பொருத்தமான வேறு ஒரு இடத்தில் நிலைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான பத்தரமுல்லப் பிரதேசத்தில் அமைந்துள்ள பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் ஒன்றுடன் கூடிய காணி ஒன்றினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தாபனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் உரிய கட்டிடத்தினை நவீனமயப்படுத்தி அதில் புலமைச் சொத்து அலுவலகத்தினை ஸ்தாபிப்பதற்குத் தேவையான அனுமதியினை வழங்கும் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

- **தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருட்கள் கட்டமைப்பாகிய கைத்தொழில் சொத்துக்களை நிருவகிக்கும் கட்டமைப்பினை (Industrial Property Administration System-IPAS) விருத்தி செய்வதில் சிரமம்.**

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருட்கள் கட்டமைப்பினை விருத்தி செய்வதற்காக e-NIPO கருத்திட்டத்தினை ஸ்தாபிப்பதற்கு இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் முகவரகத்துடன் (ICTA) 2016 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய மேற்படி நிறுவனத்தினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட பணிகளை நிறைவேற்றித் தருவதற்குத் தவறியமையின் காரணமாக e-NIPO கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தாமதமடைந்தது. மேற்படி நெருக்கடி காரணமாக மென்பொருட்கள் கட்டமைப்பினை விருத்திசெய்தல் தாமதமடைந்து உள்ளது. எவ்வாறாயினும் இது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றிற்கு கிடைக்கப்பெற்ற அனுமதிக்கு அமைய புலமைச் சொத்து அலுவலகத்தினால் வழங்கப்பட்டு உள்ள நிதி தொடர்பிலும் கவனம் செலுத்தி, மேற்படி கருத்திட்டத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான உதவியினை ICTA நிறுவனம் வழங்குதல் வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்து உள்ளது.

அதற்கு அமைய மேற்படி மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் இலங்கைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் முகவரகத்துடன் கைச்சாத்திடப்பட உள்ள புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரைவு கௌரவ சட்ட மா அதிபரிடம் முன்வைக்கப்பட்டு உள்ளது.

- **மெட்ரிட் பட்டயத்துடன் இணைதல்.**

உலக புலமைச் சொத்துக்கள் (WIPO) அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் செயன்முறை உள்ளடக்கப்பட்ட மெட்ரிட் சாசனத்திற்குள் பிரவேசித்தல் மற்றும் அதற்கு ஒத்தியங்கும் வகையில் புலமைச் சொத்துச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பன அடையாளம் காணப்பட்ட சவால் ஒன்றாகும்.

2.6 எதிர்கால இலக்குகள்

குறுகிய கால இலக்குகள்

- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினைப் பேணி வருவதற்குப் பொருத்தமான கட்டிடம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் அல்லது நிலையான அலுவலகக் கட்டிடம் ஒன்றனைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விளைதிறன் அதிகரிக்கும் வகையில் அலுவலகத்தினை மீள்கட்டமைப்புச் செய்தல்.

- புலமைச் சொத்துச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதியினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பினால் (WIPO) நடைமுறைப்படுத்தப்படும் வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் வழிமுறை உள்ளடங்கிய மெட்ரிட் சாசனத்திற்குள் பிரவேசித்தல்.

- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினை கவர்ச்சிகரமான மற்றும் அதிகூடிய விளைதிறன் கொண்ட அரச நிறுவனம் ஒன்றாகக் கட்டியெழுப்புதல்.

- பொதுமக்களுக்கு ஆக்கவுரிமைகள் தொடர்பான தகவல்களுக்குள் பிரவேசிப்பதற்கான வசதிகளை விருத்தி செய்வதற்காக நவீன தொழிநுட்ப மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு மத்தியநிலையங்கள் (TISCs) இரண்டினை 2022 ஆம் ஆண்டிற்குள் தாபித்தல்.

- இணைந்த சுற்றுக்களுக்கான திட்ட வடிவமைப்புக்களைப் (Layout Designs of Integrated Circuits) பதிவு செய்தல் தொடர்பான அடிப்படைக் கற்கை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- கைத்தொழில் வடிவமைப்புக்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் (Hague) கட்டமைப்பிற்குள் பிரவேசிப்பதற்காக கருத்திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரித்தல் மற்றும் அது தொடர்பான ஆலோசனை வழங்கல் கூட்டங்களை நடாத்துதல்.

- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கான நிகழ்நிலைக் கொடுப்பனவு வழிமுறை ஒன்றினை ஸ்தாபித்தல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் புலமைச் சொத்துக்களின் புத்தாக்கங்கள் மற்றும் வணிகமயமாக்கம் என்பவற்றினைத் துரிதப்படுத்துவதற்காக புலமைச் சொத்துக்கள் சுற்றாடல் கட்டமைப்பு ஒன்றினைக் (EIE) கட்டியெழுப்பும் கருத்திட்டத்திற்காக செயலமர்வுகளை நடாத்துதல்.

- புவியியில் குறிகாட்டிகளைப் பதிவு செய்யும் வசதிகளை செய்து கொடுத்தல்.

ஏதேனும் பொருள் ஒன்றின் அல்லது படைப்பு ஒன்றின் தோற்றம் ஏதேனும் குறிப்பிட்ட ஒரு புவியியில் பிரதேசத்தில் ஆகும் எனவும் அதற்கு விஷேட குணவியல்புகள் தன்மைகள் மற்றும் நற்பெயர் ஒன்று மேற்படி புவியியில் தோற்றத்தின் காரணமாக உருவாகி உள்ளது எனவும் நுகர்வோருக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் எடுத்துக் காட்டுவதற்காக புவியியல் குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதன் ஊடாக இலங்கைத் தேயிலை, இலங்கைக் கருவா போன்ற புவியியல் ரீதியாக முக்கியத்துவம் பெறும் இலங்கை உற்பத்திகளுக்காக அதிகூடிய வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு உரித்தான புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான நடைமுறை ஒன்று காணப்படுவதில்லை என்பதுடன் சான்றிதழ் சின்னங்களைப் பதிவு செய்தல் மாத்திரம் இதுவரை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. உரிய சட்ட வரைவு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்க முடியும்.

- தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருட்கள் கட்டமைப்பாகிய கைத்தொழில் சொத்துக்களின் நிருவாகக் கட்டமைப்பினை (Industrial Property Administration System-IPAS) அதன் அண்மைக்கால ஆகக்கூடிய இற்றைப்படுத்தல் வரை விருத்தி செய்தல்.

- கோப்புக்களை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டத்தினை அறிமுகம் செய்தல்.

<u>நீண்ட கால இலக்குகள்</u>

- ஆக்கவுரிமைகள் மற்றும் ஆக்கவுரிமைகள் அல்லாத தொழிநுட்பத் தகவல்களுக்கான பொதுமக்களின் பிரவேசத்தினை விருத்தி செய்தல்.
- புலமைச் சொத்துக்கள் சுற்றாடல் கட்டமைப்பு (EIE) ஒன்றினைக் கட்டியெழுப்புதல்.
- இணைந்த சுற்றுக்களுக்கான திட்ட வடிவமைப்புக்களைப் (Layout Designs of Integrated Circuits) பதிவு செய்தல் தொடர்பான வசதிகளை செய்து கொடுத்தல்.

- கைத்தொழில் வடிவமைப்புக்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் (Hague) கட்டமைப்பிற்குள் பிரவேசித்தல்.

    - இலத்திரனியல் ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் பாடல்கள், இசை சார் கலைப் படைப்புக்களுக்காக ஆரம்பப் படைப்பாளிகளுக்கு உரிமைத் தொகையினை செலுத்துதல் தொடர்பான உரிய பொறிமுறையினை மேலும் விருத்தி செய்தல்.

புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி

அத்தியாயம் 03 – ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை

அ) புலமைச் சொத்து நிதியம்

3.1 நிதிக் கூற்றுக்கள்

3.2 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை

3.4 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

3.5 கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை

ஆ) தலைப்பு - 299

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

3.3 நிதிப் பாய்ச்சல் தொடர்பான கூற்று

3.4 நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள்

3.5 வருமானம் சேகரித்தல் தொடர்பான செயலாற்றுகை

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை

3.7 நி.ஒ.208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதி ஒருவராக இந்தத் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

3.8 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

3.9 கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை

3. அ) நிதிச் செயலாற்றுகை – புலமைச் சொத்து நிதியம்

3. அ 1 நிதிக் கூற்றுக்கள் – புலமைச் சொத்து நிதியம்

புலமைச் சொத்து நிதியம்

2021.12.31ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்புக்கள்	2021.12.31	2020.12.31
வருமானம்		ரூ.	ரூ.
வியாபாரச் சின்னங்களின் வருமானம்	3	70,271,480	55,822,249
ஆக்கவுரிமைகளின் வருமானம்	3	6,951,459	7,108,482
கைத்தொழில் வடிவமைப்புக்களின் வருமானம்	3	561,207	533,638
ஏனைய வருமானங்கள்	4	435,016	473,269
முதலீட்டு இலாபங்கள்		-	-
முதலீட்டு வட்டி வருமானங்கள்	5	43,062,272	64,241.112
மொத்த வருமானம்		**121,227,595**	**128,178,750**
செலவுகள்			
சம்பள ஊதியங்கள் மற்றும் ஊழியர் பயன்கள்	2	2,443,119	2,691,540
கொடைகள் மற்றும் ஏனைய பரிமாற்றுக் கொடுப்பனவுகள்	2	1,263,585	1,077,030
விநியோகங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	2	40,956,811	50,079,471
ஏனையவை	2	529,177	103,235
தேய்மானங்கள் மற்றும் கடன்தீர்நிதி	2	7,212,801	7,175,802
நிதிச் செலவு	2		-
மொத்தச் செலவுகள்		**52,405,494**	**61,127,078**
காலப்பகுதிக்கான மிகை (குறைபாடு)/ வருமானம்		**68,822,100**	**67,051,672**

Page 19

புலமைச் சொத்து நிதியம்

2021.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைதொடர்பான கூற்று

	குறிப்புக்கள்	2021.12.31	2020.12.31
		ரூ.	ரூ.
சொத்துக்கள்			
அளவும் சொத்துக்கள்			
நிதி மற்றும் நிதிக்கு சமனான விடயங்கள்	8	2,411,558	1,886,552
கிடைக்கப்பெறவேண்டிய வருமானங்கள்	9	31,387,410	8,829,362
குறுகிய கால முதலீடுகள்	7	898,540,693	851,641,767
முன்னர்மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	11	5,345	5,236
		932,345,005	862,362,917
அசையாத சொத்துக்கள்			
சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்	6	31,460,226	35,324,725
கிடைக்கப்பெற வேண்டிய ஈடுசெய்தல்கள் – புலமைச் சொத்து விற்பனை ஊக்குவிப்பு மத்தியநிலையங்கள்		22,298,751	22,298,751
		53,758,977	57,623,477
மொத்த சொத்துக்கள்		986,103,982	919,986,394
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
சேரல் செலவுகள்	12	3,816,701	10,111,763
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்		-	-
மொத்தப் பொறுப்புக்கள்		3,816,701	10,111,763
தேறிய சொத்துக்கள்		982,287,281	909,874,631
தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்			
நிரண்ட மிகை / குறைபாடு	10	982,287,281	909,874,631
மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்		982,287,281	909,874,631

ஆர். பி.எஸ். ராஜபக்ஷ
கணக்காளர்
R.P.S. Rajapaksha
Accountant
National Intellectual Property Office of Sri Lanka
"Samagam Madura", 3rd Floor,
400, D.R. Wijewardhana Mw, Colombo 10.

கீதாஞ்சலி ஆர். ரணவக
புலமைச் சொத்துப் பணிப்பாளர் நா அதிபதி
G. R. Ranawaka (Mrs)
Director General of Intellectual Property
National Intellectual Property Office of Sri Lanka
Samagam Madura, 3rd Floor
400 D. R. Wijewardhana Mawatha,
Colombo 10.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலைப்புச் சட்டத்தின் 154 ஆவது உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள தத்துவங்களின் பிரகாரம் புலமைச் சொத்து நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் பணிக்காக 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 176 (5) ஆம் பிரிவிற்கு அமைவ தயாரிக்கப்பட்ட இந்த நிதிக் கூற்று 2022.02. ..நே... ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

ஜே.எம். பதிராணி ஜயவர்தன
செயலாளர்
வர்த்தக அமைச்சு

M.B. Jayawardhana
Secretary
Ministry of Trade
No. 492, R. A. De Mel Mawatha,
Colombo 03.

Page 18

புலமைச் சொத்து நிதியம்

2021. 12.31ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான இணைந்த நிதிப் பாய்ச்சல் கூற்று

நேரடி முறைக்கு ஏற்ப நிதிப் பாய்ச்சல் கூற்று

	2021.12.31	2020.12.31
நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்	ரூ.	ரூ.
வரவுகள்		
வரிகள்	2,925	2,175
பொருட்கள் மற்றும் சேவைகள் விற்பனையின் ஊடாக	116,676,219	95,196,554
வட்டி வருமானங்கள்	20,504,224	106,071,184
ஏனைய வருமானங்கள்	782,372	1,013,473
கொடுப்பனவுகள்		
ஊழியர்களுக்கான செலவு	(2,469,733)	(2,742,271)
வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள்	(43,625,775)	(45,664,349)
ஏனைய கொடுப்பனவுகள்	(1,757,472)	(1,606,526)
நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்	**90,112,760**	**152,270,241**
முதலீட்டுச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்		
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	(3,628,840)	(665,654)
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் வருமானங்கள்	-	-
முதலீடுகள் காலம் பூர்த்தியடைவதனால் கிடைக்கும் வருமானங்கள்	895,641,676	1,381,471,716
முதலீடுகளைக் கொள்வனவு செய்தல்	(942,540,602)	(1,501,163,963)
முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்	**(50,527,766)**	**(120,357,901)**
நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்		
குத்தகைப் பணத்தை மீளச் செலுத்தல்		-
அரசிற்குப் பகிர்ந்தளித்தல்	39,059,989	(31,732,185)
நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்	**(39,059,989)**	**(31,732,185)**
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளின் தேறிய அதிகரிப்பு /குறைவு)	525,005	180,155
2020.01.01ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	1,886,552	1,706,397
2020.12.31ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	**2,411,558**	**1,886,552**

Page 20

புலமைச் சொத்து நிதியம்

2021.12.31ஆந்திகதியன்று முடிவடையும் வருடத்திற்கான உரிமை முதல் மாற்றமடைதல்

தொடர்பான கூற்று

	வெளியிடப்பட்ட மூலதனம்	பிடித்து வைக்கப்பட்ட இலாபம் / நட்டம்		மொத்தம்
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
2020.01.01ஆந்திகதியன்று மீதி	843,728,223	-	-	843,728,223
முன்னைய வருடத்திற்கான சீராக்கல்கள்	-	(905,264)	-	(905,264)
மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம்	-	-	-	-
வருடத்திற்கான தேறிய இலாபம்	-	67,051,672	-	67,051,672
2020.12.31ஆந்திகதியன்று மீதி	**843,728,223**	**66,146,408**	**-**	**909,874,631**
2021.01.01ஆந்திகதியன்று மீதி	909,874,631	-	-	909,874,630
முன்னைய வருடத்திற்கான சீராக்கல்கள்	-	3,590,550	-	3,590,550
மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம்	(5,578,250)	-	5,578,250	-
வருடத்திற்கான தேறிய இலாபம்	-	68,822,100	-	68,822,100
2021.12.31ஆந்திகதியன்று மீதி	**904,296,381**	**72,412,650**	**5,578,250**	**982,287,281**

இறுதிக் கணக்கிற்கு ஏற்புடையதான கணக்குக் குறிப்புக்கள்

அடிப்படைக் கணக்கீட்டுக்கொள்கைகள் மற்றும் கூற்றுக்கள்

- 2021 சனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையான காலப்பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்கு உரிய அறிக்கையிடல் காலப்பகுதி ஆகும்.
- நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களின் அண்ணளவான ரூபாவில் முன்வைக்கப்பட்டு உள்ளது.
- இலங்கையின் அரச கணக்கீட்டுத் தாங்களுக்கு ஏற்ப கணக்குகள் தயாரிக்கப்பட்டு உள்ளன.
- நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும்போது வரலாற்று ரீதியான செலவுகள் என்னக்கரு அடிப்படையாகக் கொள்ளப்பட்டு உள்ளது. மேற்படி கணக்குகளைச் சமர்ப்பிக்கும்போது பணவீக்கத்திற்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.
- பௌதீகரீதியானது, ஒரே விதமானது மற்றும் தொடர்ச்சியாக நிலைபெறுதல் என்பவற்றின் சேரல் அடிப்படை தொடர்பான என்னக்கருவினை அடிப்படையாகக்கொண்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதுடன் அங்கு உரிய பொருத்தப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளது.
- சொத்துக்களை தேய்மானம் செய்யும் கொள்கைகள்
- நிலையான சொத்துக்கள், எளிமையான வழிகளில் தேய்மான அடிப்படை மீது உரிய சொத்துக்களில் வினைதிறன் வாழ்நாள் முழுதும் தேய்மானம் செய்யப்படும். சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்பட மாட்டாது. சொத்துக்களை நீக்கும் போது சொத்துக்களை நீக்கும் நிலம் கருத்திற் கொள்ளப்படுவது இல்லை என்பதுடன் நீக்கும் மொத்த வருடத்திற்கும் தேய்மானம் மேற்கொள்ளப்படும்

சொத்துக்களை தேய்மானம் செய்யும் சதவிகிதம்.

அலுவலக உபகரணங்கள்	10%
அலுவலக பொருத்துநல்கள்	10%
தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	05%
மோட்டார் வாகனங்கள்	10%
திரைச் சீலைகள்	20%
எடுகள்	10%
கணினிகள்	25%

- முதலீடுகள் அதன் முகப் பெறுமதி மற்றும் செலவுகள் எனும் இரு பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டு உள்ளதுடன் அவற்றின் செலவு முகப் பெறுமதியிலும் அதிகரிக்கும்போது ஏற்படும் நட்டம் மேற்படி சந்தர்ப்பத்திலேயே சீராக்கல் செய்யப்பட்டு உள்ளதுடன் செலவானது முகப் பெறுமதியிலும் பார்க்க குறையும்பொழுது ஏற்படும் இலாபம் முதலீடுகள் தேறும் சந்தர்ப்பத்தில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.
- சேரல் செலவுகள் 2022 பெப்புரவரி 20 ஆந்திகதி வரை கணக்கிடப்பட்டு உள்ளது .
- 2021.12.31 ஆம் திகதியன்று எஞ்சியுள்ள காசிதாதிகளின் இருப்பு ரூ. 2,853,599.91 ஆகும்.
- சேவைகளை வழங்குவதற்காக கணக்குகள் வருடத்திற்கு உரிய வகையில் கிடைக்கப் பெறும் வருமானம், கணக்குகள் வருடத்திற்கு உரிய வகையில் அடையாளங் காணப்படுவதுடன் முதலீடுகளுக்காக கிடைக்கப்பெறும் வருமானம் காலத்திற்கு சமவிகித முறைக்கு ஏற்ப கணக்குகளில் சேர்க்கப்பட்டு உள்ளது.
- புலமைச் சொத்துக்கள் நிதியத்தினை நிருவகிக்கும் நடவடிக்கைகளுக்காக புலமைச் சொத்து அலுவலகத்தின் அலுவலர்களுக்கு செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பவுகள் என்பன உட்பட அரசினைச் செலவுகளுக்காக ரூ. 44,401,355 தொகை ஒதுக்கீட்டுச் செலவுகள் தலைப்பு 299 இன் கீழ் அரசினால் ஏற்கப்படும்.
- அப/15/0272/625/007 ஆம் இலக்க மற்றும் 2015.04.23 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் புலமைச் சொத்து வலயுருவிப்பு மத்தியநிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகையினை, நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்காக அமைச்சரவை அனுமதி 2015.04.23 ஆம் திகதி கிடைக்கப்பெற்று உள்ளது. அதற்கு அமைய நிதியினை மீளளிப்பு செய்யுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.
- புலமைச் சொத்துக்கள் நிதியத்திற்கு எதிராக எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு உள்ளதாக அறிக்கையிடப்படவில்லை. புலமைச் சொத்து அலுவலகம், பிரதான இரு சந்தர்ப்பங்களில் புலமைச் சொத்து விடயத்திற்கு உரிய வகையில் தரப்பினர் ஒருவராக பெயரிடப்படுகின்றது.
  - i. புலமைச் சொத்துப் பணிப்பாளர் நா அதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட புலமைச் சொத்து விடயத்துடன் தொடர்பான ஒரு - தரப்புத் தீர்மானங்களுக்குவிரோதமாக வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்தல்.
  - ii. வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் தொடர்பாக எதிர்ப்புக்களை முன்வைக்கும்போது புலமைச் சொத்துப் பணிப்பாளர் நா அதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றிற்கு எதிராக, உரிய தரப்பினரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தல்.
- ஐந்தொகை திகதிற்கு பின்னர் நிகழ்வுகள் இல்லை.
- தொடர்புடைய தரப்பினர்களுடன் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

3. அ. 2 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை – புலமைச் சொத்து நிதியம்

அட்டவணை - 13 : ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

(ரூ.000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீடுகள் அளவில் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	87,113	87,113	52,405	60.16%
மூலதனம்	8,000	8,000	3,629	45.36%

3. அ. 3 கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை – புலமைச் சொத்து நிதியம்

அட்டவணை - 14 : கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை

(ரூ.000)

கொடையினை வழங்கிய நிறுவனம்	கொடையின் நோக்கம்	கொடைத் தொகை
-	-	-

3. அ. 4 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை – புலமைச் சொத்து நிதியம்

அட்டவணை - 15 : நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

(ரூ.000)

சொத்துக்களின் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2021 ஆம் திகதியன்று பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைய மீதி	31.12.2021 புதிய நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்யப்பட உள்ள	செயலாற்றுகையினை % இல் அறிக்கையிடுதல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	-	-	-	-
9152	இயந்திர உபகரணங்கள்	31,460	31,460	-	100%
9153	காணிகள்	-	-	-	-
9154	தொட்டு உணர முடியாத சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை	-	-	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்				

3. அ. 5 கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை – புலமைச் சொத்து நிதியம்

ரீஏசீ/ஏ/ஐபிஓஎப்/எப்எஸ்/21/21

பணிப்பாளர் மா அதிபதி,
தேசிய புலமைச் சொத்து நிதியம்.

புலமைச் சொத்து நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் சாராம்ச அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலமைச் சொத்து நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று மற்றும் மேற்படி தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை முதல் மாற்றமடைதல் தொடர்பான கூற்று மற்றும் மேற்படி தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள், சாராம்சம் செய்யப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய, 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்குரிய அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டு உள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் அழுத்தம் தவிர்ந்த, நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை எடுத்துக் காட்டுகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ). மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் காகிதாதிகளின் கொள்வனவுகளில் டிசம்பர் 31 ஆம் திகதியன்று எஞ்சியிருந்த காகிதாதிகளின் இருப்புக்களின் பெறுமதி ரூ. 2,853,549 என மதிப்பீடு செய்யப்பட்டு இருந்த போதிலும் இறுதியான இருப்பு என்ற வகையில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது மொத்தக் காகிதாதிகளின் செலவினை நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் சீர்செய்யப்பட்டு இருந்தது.

(ஆ). 75 அலுவலகக் கணினிகளுக்காக ரூ. 222,725 தொகையினைச் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட வைரஸ் எதிரி மென்பொருட்களின் செல்லுபடியாகும் காலம் 2021 யூலை முதல் 2022 யூலை வரையாகக் காணப்பட்டது. ஆதலால் அடுத்து வரும் வருடத்திற்காக ஏற்கப்பட்ட ரூ. 118,982 தொகைக்காக சீராக்கல் செய்ய வேண்டும் எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமையினால், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செலவு மேற்படி தொகையினால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.கொ) இணங்கியொழுகும் வகையில் என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி கணக்காய்வு நியமங்களின் அடிப்படையிலான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டு உள்ளேன் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் மற்றும் நிருவாகத்தினை மேற்கொள்ளும் தரப்பினர்களினதும் பொறுப்பு

மேற்படி நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகங்களைக் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினைத் தொடர்ச்சியாகப் பேணும் ஆற்றலினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாவதுடன், முகாமைத்துவம், நிதியத்தினை தீர்த்துக் கட்டுவதற்கு எண்ணுவதாயின் அல்லது வேறு ஒரு மாற்று வழியும் இல்லாத சந்தர்ப்பத்தில் செயலாற்றுகைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின் தவிர தொடர்ச்சியான பேணுதலின் அடிப்படையில் கணக்குகளில் சேர்த்தல் மற்றும் நிதியத்தினைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதனை மேற்கொள்ளல் என்பனவும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிருவாகத்தினை மேற்கொள்ளும் தரப்பினர்களினால், நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு வகிக்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்குத் தேவையான நிதிக் கூற்றுக்ளைத் தயாரிக்க

இயலுமாகும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

1.4. நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் அது பாதிப்புச் செலுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் சார் நியாயத் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுகள் சார்ந்த பொய்யான கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பொய்யான கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்திலும் பார்க்க மோசடிகளினால் ஏற்படும் தாக்கம் ஆதிக்கம் கூடியதாக அமைவது, அவை ஏமாற்றுக் கூட்டுச்சக்தி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், உள்நோக்குடன் புறக்கணித்தல், தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிர்வாகங்களைப் புறக்கணித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் அமைவதனால் ஆகும்.

- உள்ளக நிருவாகத்தின் பயனுறுதி தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லாவிடினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகம் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான பேணல் தொடர்பாக போதியளவான உறுதியற்ற தன்மை ஒன்று காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்கான நிதியத்தின் தொடர்ச்சியான பேணல் தொடர்பான அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான ஏற்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான உறுதியற்ற தன்மை உள்ளதாக நான் தீர்மானிப்பதாயின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியதாக இல்லையாயின் எனது அபிப்பிராயத்தினை நிலை நிறுத்தச் செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான பேணல் பூர்த்தியடைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பன மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன், அவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளது என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் என்பன தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினர்கள் அறிவூட்டப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (I) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது ஒத்தியங்குகின்றது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (I) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செற்பாடுகள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ). கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணி ஒன்றின் உரித்தினை சுவீகரித்துக் கொள்ளாமல் புலமைச் சொத்து விற்பனை ஊக்குவிப்பு நிலையம் ஒன்றினை நிர்மாணித்து வரும் பொழுது அது சார்ந்த காணிகள் சுற்றுலாத்துறைக் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் எடுத்துக் கொள்ளப்பட்டு இருந்தது. அதற்கு அமைய கட்டிட நிர்மாணத்திற்காக செலவழிக்கப்பட்ட ரூ. 22,298,751/- தொகைப் பணத்தினை மேற்படி அதிகார சபையிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்காக 2015 மார்ச் 15 ஆம் திகதிய மற்றும் அப/15/0272/623/007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக அனுமதி கிடைக்கப்பெற்று இருந்தது. அதற்கு அமைய அதிகார சபையினால் மேற்படி காணி மதிப்பீடு செய்யப்பட்டு மேற்படி தொகையினை புலமைச் சொத்து அலுவலகத்திற்கு விடுவித்தல் தொடர்பில் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத் தாபனம் இணக்கம் தெரிவிக்காமையினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் மேற்படி தொகையினை தீர்த்து வைப்பதற்கு இயலாமல் சென்றிருந்தது.

(ஆ). 2019 ஆம் ஆண்டில் மிகையாகச் செலுத்தப்பட்டு இருந்த ரூ. 273,083 தொகைப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை.

3.2 செயலாற்றுகை

(அ). ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களைப் பதிவு செய்தல்

I. 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 181 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றுள் 30 அனுமதிப்பத்திரங்கள் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாக இருந்தன. சட்டத்தின் 83 (1) ஆம் பிரிவிற்கு அமைய ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் ஒன்றின் செல்லுபடியாகும் காலம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதி முதல் 20 வருடங்கள் ஆகும் ஆகையினால் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்காக 06 வருடங்கள் தொடக்கம் 13 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் ஒன்று சென்றிருந்தமை செல்லுபடியாகும் காலத்தின் அதிக பகுதி பதிவு செய்யும் செயற்பாட்டிற்காக செலவழிந்து உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு அமைய ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக விண்ணப்பதாரி எதிர்பார்க்கும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

II. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 10 ஆக்கவுரிமைக் கோப்புக்களின் மாதிரி ஒன்றினைப் பரீட்சிக்கும் போது இரண்டாம் நிலைப் பரீட்சிப்பின் தவறுகளை சீர்செய்வதற்கு சட்டத்தின் 78 (2) ஆம் பிரிவிற்கு அமைய, அறிவிக்கப்பட்ட திகதி முதல் 03 மாதங்கள் கழியும் முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும் அதற்காக 10 மாதங்கள்

தொடக்கம் 41 மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி ஒன்று சென்றிருந்தமை ஆக்கவுரிமைகளைப் பதிவு செய்தல் தாமதமாவதற்குக் காரணமாக இருந்தது.

III. கடந்த வருடங்களுக்கு உரிய வகையில் பூர்த்தி செய்யப்படாத 600 கோப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் திட்டமிடப்பட்ட வகையில் அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. மேற்படி காரணத்தினால் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களுள் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பூர்த்தி செய்யப்படாத ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் (கோப்புக்கள்) எண்ணிக்கை 1142 ஆகக் காணப்பட்டது.

(ஆ). ஆக்கவுரிமைகள் மற்றும் ஆக்கவுரிமைகள் அல்லாத தொழிநுட்பத் தரவுக் களஞ்சியத்திற்குள் பிரவேசிப்பதற்கான வசதிகளை வழங்குதல், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது ஏற்படும் தகவறுகள் காரணமாக நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையினைக் குறைத்தல் என்பவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பின் ஒத்துழைப்பில் இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிநுட்ப மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு மத்திய நிலையம் ஒன்றினைத் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டு இருந்தது. நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை, விண்ணப்பித்த மொத்த எண்ணிக்கையின் நூற்றிற்கு 48 சதவீதம் தொடக்கம் நூற்றிற்கு 60 சதவீதத்திற்கு இடையிலான வீச்சு ஒன்றிலும் அதிகமான பெறுமதி ஒன்றினைப் பெறுவதனைக் குறைத்துக் கொள்வதற்கு, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இரண்டு நிலையங்களைத் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் அதில் ஒரு நிலையம் மாத்திரமே தாபிக்கப்பட்டு இருந்தது.

(இ). மெட்ரிட் கருத்திட்டம், ஹேக் கருத்திட்டம் போன்ற சர்வதேச தரவுகளுக்காக பிரவேசிக்கும் பணிகள் மற்றும் வெளியீட்டு உரிமையுடன் தொடர்புடைய உரிமைகள் என்பவற்றினைப் பாதுகாக்கும் பொறிமுறை, போன்ற கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கணினித் தகவல் தொழிநுட்பம் நேரடியாக தொடர்புருவதனால் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் கணினி மென்பொருள் கட்டமைப்பினை (IPAS) விருத்தி செய்தல் தாமதமடைதல் மேற்படி சகல கருத்திட்டங்களினதும் செயலாற்றுகையின் மீது பாதகமான வகையில் பாதிப்புச் செலுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ). கைத்தொழில் வடிவமைப்புக்களை சர்வதேச ரீதியில், பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேக் கருத்திட்டத்தினைத் தாபித்தல் தொடர்பில் ஆரம்ப கட்ட ஆய்வு ஒன்றினை 2020 ஆம் ஆண்டில் மேற்கொண்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளது எனினும் உரிய சட்டங்களின் நிலைமை, தொழிநுட்ப விடயங்களின் விடயப் பரப்பு என்பன தொடர்பாக மேலும் ஆய்வு செய்து ஆய்வுகள் மற்றும் இரண்டு செயலமர்வுகளை நடாத்துவதற்கு 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் ஒரு செயலமர்வு மாத்திரமே நடாத்தப்பட்டு இருந்தது.

அவ்வாறே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைக்கு அமைய தகைமை பெற்ற குழுக்களில் இருந்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டு சாத்தியவள ஆய்வு ஒன்றின் பின்னர் ஹேக் கட்டமைப்பிற்குள் பிரவேசித்தல் அல்லது பிரவேசிக்காமை தொடர்பில் தீர்மானித்தல் வேண்டும் என்பதனை மேற்படி அறிக்கையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு இருந்தது. அதன்

காரணமாக தகைமை பெற்ற குழுக்களில் இருந்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படும் சாத்தியவள ஆய்வு தாமதமாவதன் அடிப்படையில் ஹேக் கட்டமைப்பிற்குள் பிரவேசித்தல் தொடர்பிலான தீர்மானமும் தாமதம் அடைகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ). இணைந்த சுற்றிற்கான அமைப்புத்திட்ட வடிவமைப்புக்களைப் பதிவு செய்தல், புவியியல் குறிகாட்டியினைப் பதிவு செய்தல் மற்றும் நிருவாகம் என்பவற்றிற்காக முறையே சட்டத்தின் XXXI மற்றும் XXXIII ஆம் அத்தியாயங்களின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்த போதிலும் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்காமையின் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் கூட மேற்படி விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. விஷேடமாக புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதனூடாக இலங்கைக்கே உரித்தான பொருட்களுக்காக வெற்றிகரமான சந்தை ஒன்றினை சர்வதேச ரீதியில் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்தது.


3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்டு உள்ள நிதி ஒழுங்குவிதி 877 இன் (2) (உ) இன் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனினும் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது 2016 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றுகை மாத்திரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.

டபிள்யு.பீ.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்.

3.ஆ) நிதிச்செயலாற்றுகை – தலைப்பு 299

3. ஆ.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று – தலைப்பு 299



2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீடீ- எப்

(ரூபா)

பாதிட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீடீ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
56,839,000	நிறைவேறி பணமுற்பணங்கள்		42,940,000	39,702,000	ஏசீடீ-3
-	வைப்புகள்		22,475	21,950	ஏசீடீ-4
-	முற்பணக் கணக்குகள்		5,246,604	2,927,403	ஏசீடீ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
56,839,000	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		48,209,079	42,651,353	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		48,209,079	42,651,353	
	நிறைசெர்க்கான அனுப்பீடு (ஈ)		4,775	34,516	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		48,204,304	42,616,837	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
55,000,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய வழிப்பு அனுகூலங்கள்	5	44,401,355	42,575,009	
-	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	-	-	ஏசீடீ-2(ii)
1,300,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	407,787	494,930	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
56,300,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		44,809,142	43,069,939	
	மூலதனச் செலவினம்				
-	மூலதனச் சொத்துக்களின் முகாமைப்பும், மேம்படுத்துதலும்	10	-	-	
	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	-	-	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீடீ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
-	நிறன் விருத்தி	14	-	-	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
-	மொத்த மூலதனச் செலவினம் (எ)		-	-	
	வைப்புக் கொடுப்பனவுகள்		22,475	21,950	ஏசீடீ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		5,363,000	1,850,764	ஏசீடீ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		5,385,475	1,872,714	
56,300,000	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		50,194,617	44,942,653	
539,000	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மிகை ஒ = (உ-ஐ)		(1,990,313)	(2,325,815)	
-	பணமுற்பண இனக்க அறிக்கையின்படி மிதி		(1,990,313)	(2,325,815)	ஏசீடீ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணமுற்பண மிதி		-	-	ஏசீடீ-3
			(1,990,313)	(2,325,815)	

3. ஆ.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று –தலைப்பு 299

ஏசீடு 05

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்று			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீடு-6	4,281,267	4,281,267
நிதி சொத்துக்கள்			
முற்பணம் கணக்குகள்	ஏசீடு-5/5a	8,965,071	8,848,675
காசு மற்றும் காசுக்குச் சமானமான	ஏசீடு-3	4,775	34,516
மொத்த சொத்துக்கள்		13,251,113	13,164,458
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
நிறைசேர்க்கு தேறிய சொத்துக்கள்		8,965,071	8,848,675
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		4,281,267	4,281,267
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீடு-5ii	-	-
நடமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீடு-4	-	-
திரண்டபடி பணிமுற்பண மீதி	ஏசீடு-3	4,775	34,516
மொத்தப் பொறுப்புக்கள்		13,251,113	13,164,458

பக்க இலக்கம் 01 முதல் 26 வரை ஏசீடு 1 முதல் ஏசீடு 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 27 முதல் 32 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மீதமும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் நிறைசேர்ப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இதனால் சான்றுப்படுத்துகின்றோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அதிகபட்சம் நிறைவுடனும் வகை நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அவசியமாக அதற்குத் தொகுதியை வினைத்திறனுடன் நடமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அதுகு மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது வகை இதனால் சான்றுப்படுத்துகின்றோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பெயர்/ஜே.எம். பத்மாணி ஜயவர்தன பதவி :செயலாளர், வர்த்தக அமைச்சு	கணக்கீட்டு உத்தியோகத்தர் பெயர்/ஜி.ஆர்.ரனவக பதவி :புலமைச் சொத்துப் பணிப்பாளர் நா அதிபதி	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ ஆலோசகர்(நிதி) பெயர் :ஆர்.பி.எஸ்.ராஜபக்ஷ பதவி :கணக்காளர்
திகதி 2022.02.25	திகதி 2022.02.25	திகதி 2022.02.23

J.M.B. Jayawardhana
Secretary
Ministry of Trade
No. 492, R. A. De Mel Mawatha,
Colombo 03.

G. R. Ranawaka (Mrs)
Director General of Intellectual Property
National Intellectual Property Office of Sri Lanka
Samagam Madura, 3rd Floor
400 D. R. Wijewardhana Mawatha,
Colombo 10

R.P.S. Rajapaksha
Accountant
National Intellectual Property Office of Sri Lanka
"Samagam Madura", 3rd Floor,
400, D.R. Wijewardhana Mw, Colombo 10.

3. ஆ.3 நிதிப் பாய்ச்சல் கூற்று – தலைப்பு 299

ஏசி-8

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2021 ரூபா	திருத்தப்பட்ட 2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேரிக்கப்பட்ட வருமானம்	2,521,351	2,398,948
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	42,940,000	39,702,000
முற்பணங்களை அறவிடல்	4,785,936	3,029,542
வைப்புக்களின் பெறுகை	22,475	21,950
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	50,269,762	45,152,440
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பவுகள்	44,374,635	42,545,229
மானியங்களும் மற்றுக் கொடுப்பவுகளும்	407,787	494,930
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	97,090	205,051
நிறைசேர்க்குத் தீர்க்கப்பட்ட பணமுற்பணம்	4,775	34,516
முற்பணக் கொடுப்பவு	5,363,000	1,850,764
வைப்புக் கொடுப்பவு	22,475	21,950
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	50,269,762	45,152,440
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	-	-
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதிக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கூட்டுகள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
கொள்வனவு அல்லது பௌதிகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	-	-
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஏ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அளவு (ஓ)=(எ)+(ஏ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3. ஆ.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் – தலைப்பு 299

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருந்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்காது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) **நிதிக் கூற்றுக்களுக்கான படிவங்களில் மாற்றங்களும் ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களை சரிசெய்தலும்**

2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன.

3. ஆ.5 வருமானம் சேகரித்தல் தொடர்பான செயலாற்றுகை – தலைப்பு 299

அட்டவணை- 13 : ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

(ரூ.000)

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு			சேர்க்கப்பட்ட வருமானம்	
			ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவு (ரூ)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
-	-		-	-	-	-

3. ஆ.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை – தலைப்பு 299

அட்டவணை - 14 : ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

(ரூ.000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீடு அளவில் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	56,300	56,300	44,809	79.59%
மூலதனம்	-	-	-	-

3. ஆ.7 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை – தலைப்பு - 299

அட்டவணை - 15 : நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை

நன்கொடை வழங்கிய நிறுவனம்	நன்கொடையின் நோக்கம்	நன்கொடைத் தொகை
-	-	-

3. ஆ.8 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை – தலைப்பு 299

அட்டவணை - 16 : நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

(ரூ.000)

சொத்துக்களின் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2020 திகதியன்று பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைய மீதி ரூ.000	31.12.2020 ஆம் புதிய நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கு அமைய மீதி ரூ.000	எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்யப்பட உள்ள	செயலாற்றுகையினை % இல் அறிக்கையிடுதல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	-	-	-	-
9152	இயந்திர உபகரணங்கள் – தலைப்பு	4,281	4,281		100%
9153	காணிகள்	-	-	-	-
9154	தொட்டு உணர முடியாத சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியில் விஞ்ஞானச் சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை	-	-	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

3. ஆ.9 கணக்காய்வு அறிக்கை – தலைப்பு - 299

ரீஏசீ/ஏ/ஐபிஓ/எப்எஸ்/21/14

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் சாராம்ச அறிக்கை.

1. *நிதிக்* **கூற்றுக்கள்**

1.1 அபிப்பிராயம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும் மேற்படி நிதிக் கூற்று தொடர்பான எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானிப்புக்கள் என்பன இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளன. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களின் மூலம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வுத் தரப்படுத்தல்களுக்கு (இ.க.கொ) இணங்கி ஒழுகும் வகையில் என்னால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியதாக உள்ளன மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.3 நிதிக் கூற்று தொடர்பாக தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கி ஒழுகும் வகையிலும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகும் வகையிலும் உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான நிலைமை ஒன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுகள் சார் பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகத்தினைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலத்திற்குத் தேவையான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க இயலுமாகும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதி நிருவாகத்திற்காக உற்பத்தித்திறன் மிக்க உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருதல் தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் உற்பத்தித்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை உற்பத்தித்திறன் மிக்க முறையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு

நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த பிறழ் கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

கணக்காய்வின் போது, இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதி ஒன்று என்ற வகையில் என்னால் தொழில்சார் ரீதியிலான தீர்ப்பு மற்றும் தொழில்சார் சிக்கனத்தன்மை என்பவற்றுடன் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுகள் சார்ந்த பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போதும் மற்றும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகள் திட்டமிட்டு டைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக ிருவாகங்களைத் தவிர்த்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.
- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகம் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளதா என மதிப்பீடு செய்தல்.
- ிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுத் தேடல்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் என்பன தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ). நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்தியங்குகின்றது எனவும்,

(ஆ). கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டு இருந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்கி ஒழுகாமை

2018 ஆம் ஆண்டின் சனவரி 24 ஆம் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 01 மற்றும் 05 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு உத்தியோகத்தர் சார்பிலும் செயலாற்றுகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மனித வளத்தினை திட்டமிடப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்வதற்காக மனித வள அபிவிருத்தித் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3. செயலாற்றுகை மீளாய்வு

3.1 முகாமைத்துவப் பலவீனங்கள்

2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவு ஒன்றிற்கு அமைய வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கு உரிய வசதிகளை வழங்கும் மெட்ரிட் சாசனத்திற்குள் பிரவேசிக்கும் கருத்திட்டத்திற்காக ரூ. 100 மில்லியன் தொகை ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டு இருந்தது. மேற்படி கருத்திட்டத்தினை டைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சேவர் இயந்திரத்தினைக் கொள்வனவு செய்தல், கட்டமைப்பினை நிறுவுதல் மற்றும் பராமரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றிற்காக இலங்கைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் ிறுவனம் (ICTA) தெரிவு செய்யப்பட்டு இருந்ததுடன் 2016 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்படி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டு இருந்தது. ஒப்பந்தத்திற்கு அமைய உரிய பணி 06 மாத காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் மூன்று வருடங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய ரூ. 7.5 மில்லியன் பராமரிப்புச் செலவுடன் சேர்த்து ரூ. 32.5 மில்லியன் தொகை ஒப்பந்தம் செய்யப்பட்ட தினத்திலேயே உரிய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டு இருந்தது. ஒப்பந்தம் செய்யப்பட்டதற்கு அமைய உரிய பணியினை நிறைவேற்றாமையின் காரணமாக மீண்டும் ஒரு முறை மேற்படி நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அமைச்சுச் செயலாளருக்கு 2020 பெப்ரவரி 20 ஆம் திகதிய மற்றும் அப/20/0139/215/009 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டு இருந்த ஆலோசனைகளுக்கு அமைய முன்வைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரைவிற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்கள் 2021 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி கிடைக்கப்பெற்று இருந்தன.

